சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **170 / 2021**

பெயர்: பழனியாண்டி (மூன்றாவது பிரதிவாதி) பி.வா.சா. 1 தேதி **10.03.2026**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் முதல் பிரதிவாதி எனது மாமியார், இரண்டாவது பிரதிவாதி எனது மனைவி. எனது மாமனார் ராமலிங்கம், ராமசாமி, பெத்தாயி, பொன்னம்மாள் ஆகியோர்கள் உடன் பிறந்தவர்கள். மேற்படி ராமலிங்கம், ராமசாமி இறந்துபோய்விட்டார்கள். மேற்படி பெத்தாயி என்பவர் தான் அ.வ.22/2013 என்ற வழக்கினை அவரது சகோதர, சகோதரிகள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பெத்தாயி-யின் மகள் தான் வெள்ளையம்மாள். மேற்படி வெள்ளையம்மாள் தான் எனது மாமியார். மேற்படி வெள்ளையம்மாளை தான் பெத்தாயி-யின் சகோதரர் ராமலிங்கம் திருமணம் செய்துள்ளார். அ.வ.169/2021 வழக்கில் இந்த வழக்கு சொத்தை பொறுத்து உரிமை எதுவும் கோரவில்லை என்று சொன்னால் உரிமை கோரியுள்ளோம். அ.வ.169/2021 வழக்கில் நான் தரப்பினர் இல்லை. மேற்படி அ.வ.169/2021, இவ்வழக்கு, அ.வ.22/2013 ஆகிய வழக்கு சொத்திற்கும், எனக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். மேற்படி அ.வ.169/2021 வழக்கில் இந்த வழக்கில் கண்ட சொத்து இடம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அ.வ.22/2013 வழக்கில் எனது மனைவி மற்றும் மாமியார் பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி அ.வ.22/2013 வழக்கிலும் எங்களது தரப்பில் எதிரிடை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட சொத்தானது வாதிகளுக்கு முன்பு ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் ஜெயராமன், மருதை பெயரில் இருந்தது. மேற்படி ஜெயராமன், மருதை ஆகியோர்களின் தாயார் தான் அருக்காணி என்கின்ற பொன்னம்மாள் என்றால் சரிதான். மேற்படியார்களிடம் இருந்து வாதிகளின் தாயார், பாதுகாவலராக இருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா நாளது தேதியில் யார் பெயரில் உள்ளது என்றால் வாதிகளின் பெயரில் தான் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் தான் எனக்கும், எனது மாமியாருக்கும் சொத்து உள்ளது. மேற்படி தாவா சொத்தில் தான் வாதிகள் குடியிருந்து வருகிறார்கள். மேற்படி சொத்தில் நாங்களும் குடியிருந்து வருகிறோம்.

2. எனது மாமியார் எந்த சர்வே எண்ணில் உள்ள பூமியில் குடியிருந்து வருகிறார் என்றால் சர்வே எண். 589/1DC. வழக்கு சொத்தின் சர்வே எண். 589/1A, 589/1C. எனது பெயரில் உள்ள சொத்தின் சர்வே எண். 580/3A. கோழிபண்ணை உள்ள சொத்தின்

சர்வே எண் தெரியுமா என்றால் சர் வேஎண். 589/1C -யில் இருந்து சர்வே எண். 589/1B-க்கு வாதிகள் வருகிறார்கள். அதனை தடுத்துவிட்டோம். மேற்படி சங்கதியை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் அருகில் எனக்கு நிலம்இருப்பதாகவும், அதற்கு பாதை வசதி இல்லாத காரணத்தினால் தாவா சொத்தை வாதிகளிடம் நான் விலைக்கு கேட்டேன் என்றாலும், அதனை வாதிகள் கொடுக்க மறுத்ததால் எனது மாமியார் மூலமாக அ.வ.169/2021 என்ற வழக்கையும், எனது மாமியாரின் தாயார் பெத்தாயி மூலமாகவும் அ.வ.22/2013 என்ற வழக்கையும் வாதிகளை பழிவாங்கவேண்டும் என்பதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் குடியிருந்து அனுபவம் செய்துவதால், வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், மேற்படி சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 16:44:15 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.